திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள், அது சரியா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமாஷாகத்தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கல்லணை விரிவாக்கக் கால்வாயை மேம்பாடு செய்யும் திட்டம்.

* வினா எண். 673—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிபாரா—

மன்னார்குடி தாலுக்கா, பட்டுக்கோட்டை தாலுக்கா ஆகியவற்றில் பாசன வசதியை மேம்பாடு செய்ய கல்லணை விரிவாக்கக் கால்வாயை மேம்பாடு செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கல்லணை விரிவாக்கக் கால்வாய் நல்ல முறையில் இயங்கி வருகிறது. ஆகவே அதனை சீரமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிறது. கல்லணை விரிவாக்கப் பகுதியிலே—மன்னார்குடி, பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளிலே எவ்வளவு மழை பெய்தாலும் கூட பாசனத்திற்கு நீர் இல்லாமல் பல விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் என்றால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விக்கு தாங்கள் பதிலைச் சொல்கிறீர்களா ? அமைச்சர் என்ன சொல்கிறார் என்று திரும்பச் சொல்லி விளக்கம் வியாக்கியானம் செய்யத் தேவையில்லை.

திரு. மு. அம்பிகாபதி : அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி பரிசீலிக்கக் பரிந்துரைக்க, குழு அமைப்பதற்கு ஆலோசனை ஏதாவது செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இப்போது இருக்கக் கூடிய கல்லணை விரிவாக்கத் திட்டம் நல்ல முறையிலே இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஆகவே அதை விரிவாக்கவோ சீர் செய்யவோ நிலைமை எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் ஒருவேளை நீர்ப் பற்றாக்குறை இருக்கலாம்,

பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்துகின்ற திட்டம் (மாடர்னைசேஷன் ஸ்கீம்) என்ற முறையிலே அந்தப் பணிகளுக்காக நாம் நடவடிக்கை எடுக்கிறோம். அப்படி நவீனப்படுத்தப் படுமானால் உறுப்பினர் அவர்கள் சொல்கிற குறைபாடுகள் தவிர்க்கப்பட்டு எல்லாப் பகுதிகளுக்கும் பாசன வசதி கிடைக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : மேம்பாடு என்றால் பாசனம் பெறுவதை விசேஷமாக நவீனப்படுத்துவது, அவ்வாறு செய்வதற்கு செயற் குறிப்பு என்ன இருக்கிறது ? அதனுடைய விவரங்கள் என்ன ? அந்தப் பகுதியை—இப்போது அல்ல, தண்ணீர் எல்லாம் வந்து முடிந்து விட்டது—தண்ணீர் சிரமம் இருக்கிறபோது அமைச்சர் அவர்கள் வந்து பார்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: நிச்சயமாக நான் வருகிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, கல்லணை. விரிவுபடுத்துகின்ற இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றி நீர் கிடைக்காத நிலைமையில் உள்ள பகுதிகளில்—புதுக்கோட்டை இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு நீரை எடுத்துச் செல்கிறார்கள்— தஞ்சை மாவட்டத்திலே நீர் இல்லாத பகுதிகள் இருக்கிறபோது தண்ணீர் கிடைப்பதற்கு இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியில் இந்தக் கேள்விக்கு தொடர்பாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ தஞ்சாவூர் பகுதியில் சிரமமாக இருக்கிறது. அதை கவனிக்காமல் விட்டுவிட்டு இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு செய்வதுபோல் —காவிரி நீரை மட்டும் இந்த அரசு நம்பி மற்றத் திட்டங்களை எடுக்கவில்லை என்ற—தவறான கருத்து ஏற்படும். கிழக்கு இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற பின்தங்கிய பகுதிகளுக்கு மழை காலங்களிலே தண்ணீர் விரையமாக கடலிலே கலக்கக் கூடிய நிலையைத் தடுத்து அந்த நீரைப் பயன்படுத்துகின்ற திட்டம் தனித் திட்டம். கல்லணையை மேம்படுத்துகின்ற திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகிறபோது அதை அகலப் படுத்துகிற நிலைமை ஏற்படுகிறபோது கூடுதல் தண்ணீர் கிடைப்பதன் மூலம் பற்றாக்குறை பகுதிகளுக்குப்பயன்படுத்த முடியும்

Institute of Hydraulics and Hydrology at Poondi.

Q. No. 1674: THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Irrigation be pleased to state:

(a) whether it is a fac that a grant of Rs. 15 lakhs by the Ce tral Board of Irrigation and Power for giving a fill p ot research activities at the Institute of Hydraulics and Hydroloy in Po ndi, near Madras has been surrendered to the Agency,

(b) if so, the de'ails thereof, and

(c) the reasons therefor?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மத்திய நீர்ப் பாசன மின் கழகத்தால், பூண்டி நீரியல் ஆய்வுக் கழகத்துக்கு விரிவான ஆய்வுகட்காக அளிக்கப்பட்ட ரூ. 15.00 இலட்சம் திரும்ப ஒப்படைக்கப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இதற்கு இடமில்லை.

பரம்பிக்குளம் ஆளியார் அணையிலிருந்து பாசனம் பெறும் நிலப்பரப்பு.

வினா எண். 675: திரு. கே. ரமணி: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) பரம்பிக்குளம்—ஆளியார் அணையிலிருந்து நீர்ப் பாசனம் பெறுகிற மொத்த நிலப் பரப்பு எவ்வளவு?

(ஆ) தற்போதுள்ள பாசன நிலப் பரப்பை மேலும் அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) பரம்பிக் குளம்—ஆளியாறு மூலத் திட்டத்தின்படி 1,01,500 ஹெக்டேர் (2,50,700) ஏக்கர் பயன் அடையும்.

(ஆ) மற்றும் (இ): மேலும் 46,500 ஹெக்டர் (1,15,000 ஏக்கர் பரப்புள்ள நிலங்களை இந்த ஆயக் கட்டில் சேர்க்க அரசு 1978ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்வாண்டு மேலும் இவ்வாயக்கட்டுகளின் மத்தியிலும், விளிம்பிலும் விடுபட்டுப்போன சுமார் 25,000 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலங்களை இந்த ஆயக் கட்டில் சேர்க்க அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. இது தவிர நிலங்களை மேலும் சேர்க்க கோரிக்கைகள் வந்துள்ளன. இவற்றின்மீது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் அறிக்கை கோரப்பட்டுள்ளது கல்லணை